பக்கங்கள்; 6 விலை; ரூபா 10.00

# சங்கமம்
# SANGAMAM

[கூட்டுறவுக் குரல் Voice of Co.op]

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு"

UNIVERSITY OF JAFFNA LIBRARY ... PERIODICALS DIVISION

ஆறு 1 | திருவள்ளுவர் ஆண்டு 2029 | ஆகஸ்ட் 1998 | அருவி 12

அரசு உணவை ஆயுதமாக்கும் முறையை நீக்கி; இடம்பெயர்ந்து

# பட்டினியால் வாடும் மக்களுக்கு

# முழு நிவாரணம் வழங்க வேண்டும்!

## அரசிடம் பொது அமைப்புக்கள் எதிர்பார்ப்பு

...பகுதியில் கடந்த இரண்டரை மாதங்களாக இ.பெ. மக்களுக்கு நிவாரணம் வழங்க ஸ்ரீலங்கா அரசு உருப்படியான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை. வன்னியில் அரச அதிகாரங்கள் முடிக்கிடந்த போதும் அரசு மௌனம் சாதித்தது.

உணவை ஆயுதமாக்கி தமிழர்களை பலவீனப்படுத்த பாதுகாப்பு அமைச்சு கருதியுள்ளதா? அதன் எதிரொலிதான் நிவாரண வெட்டா? எனப் பல்வேறு பொது அமைப்புக்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

ஏற்கனவே 1997 ஆனி முதல் திடீரென்று தன்னிச்சையாக வன்னிமாவட்டங்களுக்கான நிவாரணத்தை அரசு அரைவாசியாகக் குறைத்தது. அவ் வேளையிலும நிவாரணக் குறைப்பைக் கண்டித்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடாத்தினார்கள்,

பல பொது அமைப்புக்கள் அரசின் செயலைக் கண்டித்தன ஆனால் அரசு, அதிகாரிகள் மீது பழியைப் போட்டுவிட்டு நழுவிக் கொண்டது

மீண்டும் 1998 ஆடிமாதம் முதல் அரசு மேலும் நிவாரணத்தை அரைவாசியாகக் குறைத்தது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டத்தில் வதியும் இடம் பெயர்ந்த மக்கள் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.

வன்னியில் அரச செயலகங்கள்; வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் முன்னால் பூகம்பமாக பொங்கி எழும் மக்கள் போராட்டங்களும், பொது அமைப்புக்களிடமிருந்து பரவலாக எழுக கண்டனக் குரல்களும் உச்சநிலை அடைந்த வேளையில தான்! இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு நிவாரணம் முழுமையாக வழங்கப்படுமென்ற அறிவிப்பை அரசு வெளியிட்டு சாவதேச சமூகத்தைத் திருப்திப்படுத்த முனைந்தது.

இராணுவக் கட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடற்றபகுதியாக இருந்தாலும் பாகுபாடு காட்டாமல் மனிதநேய அடிப்படையில் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்

மீளமுடியாத யுத்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க இயலாது தவிக்கும் ஏதிலிகளுடன் அரசிற்கு உணவுப்போர் ஏன்?

நிவாரண விநியோகம் இலங்கையில் எப்பாகத்திலும் ஒரே நடைமுறையில் இருக்கும் பொழுது வட பகுதியில் மட்டும் அடிக்கடி மாறும் நிலை நீக்கப்பட வேண்டும்.

1997 வைகாசிக்கு முன்னர் வழங்கப்பட்டது போன்று இடம் பெயர்ந்து நிவாரணம் பெறத்தகுதியுடைய அனைத்து குடும்பங்களுக்கும் முழுமையான நிவாரணம் வழங்கப்பட வேண்டும்

நிவாரணம் வழங்கும் திட்டம் எழுந்தமான மாற்றங்களுக்குட்படாதவாறு அமைய வேண்டும் என பல்வேறு பொது அமைப்புக்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

### முழுமையான நிவாரணம்

| | வாராந்தம் | மாதாந்தம் |
|---|---|---|
| ஒருவருக்கு | 84/- | 336/- |
| இருவருக்கு | 154/- | 616/- |
| மூவருக்கு | 210/- | 840/- |
| நால்வருக்கு | 252/- | 1008/- |
| ஐவர் அதற்கு மேல் | 315/- | 1260/- |

## கிளி- கூட்டுறவுச் சபையில் கணனி, தொழிற் பயிற்சிகள்

இருபத்தோராம் நூற்றாண்டின் தொழிற் தகைமைகளுக்கு அமைவாக கூட்டுறவுப் பணியாளர்களுக்கு கணனிப்பயிற்சி வழங்குவது என கிளி - மாவட்ட கூட்டுறவுச்சபை தீர்மானித்துள்ளது எதிர்வரும் ஆண்டின் உயர்தரப் பயிற்சி பெறும் மாணவர்க்கு மேலதிகமாக கணனிப் பயிற்சி வழங்குவது எனவும். இதற்கான ஒழுங்குகளை செஞ்சிலுவைச சங்க கணனிப்பயிற்சி நிலையத்தினூடாக மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மகளிர் இளைஞர், மாணவர் ஆகியோருக்கு உணவும், போசாக்கும், வீட்டுத்தோட்டம், தேனீ வளர்ப்பு, புத்தகம் கட்டுதல போன்ற சிறு தொழிற் பயிற்சிகளை சங்கங்களின் அங்கத்தவர்களிடையே இருந்து தேர்வு செய்து நடத்துவது என கிளி-மாவட்ட கூட்டுறவுச்சபை இயக்குனர் சபையினால் தீர்மானிக்கப் பட்டுள்ளது

அத்தோடு பாடசாலை கூட்டுறவுச்சங்கம், சி. க. கூ. சங்கம் ஆகியவற்றிற்கான முகாமைத்துவப் பயிற்சிகளையும் வழங்குவது எனவும் சபை மேலும் தீர்மானித்துள்ளது

இப் பயிற்சிகளில் பங்குபற்றும் ஆர்வமுடையவர்கள் மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திரு வேகுமாருடன் தொடர்பு கொண்டு விபரங்களைப்பெற்றுக்கொள்ளலாம்

## தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம்

வடகிழக்கின் ஊர்காவற்றுறைத் தேர்தல் தொகுதி மட்டக்களப்பு மாவட்டம் ஆகிய பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றியவர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 27 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 பேரும் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன

வடகிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வடகிழக்கின் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"என்னை அன்போடு ஆளாக்கி மகிழ்ந்து ஆதரவு தந்தீர்கள் நன்றி- ஒரு வயது முடிகிறது இனியும் உங்கள் ஆதரவு எனக்கு வேண்டும்."

- சங்கமம் -

வெளியீட்டுக்கான ஆதரவு:- கிளி. ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமொழியியலில் தமிழுக்கு முதன்மை

தமிழ் தொன்மையானது; பண்பட்டது, வரலாற்றுச் சிறப்புடையது என்று தோன்றி வளர்ந்தது என்று எவரும் இயம்ப முடியாத அளவுக்குப் பழமையானது, செழிப்பு மிக்கது பிற நாட்டினர் நாகரீக நிலையை எட்டாத காலத்திலேயே தமிழர் வேற்று மொழியினரோடு தொடர்பு கொள்ளாத காலத்திலேயே தமிழர் தமக்கே உரித்தான கலப்பற்ற நாகரீகத்தையும் இலக்கியப் போக்கினையும் கொண்டு சிறப்புற்று விளங்கினர்.

உலகில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றது என்பது விடையிறுப்பது இயலாத காரியம் ஆயினும் "சுமார் 5000 வரையிலான மொழிகள்" என குறிப்பிடலாமென மொழியியல் வல்லுனர்கள் கூறுகிறார்கள். ஆயினும் எழுத்துருப் பெற்ற மொழிகள் 2796 வரை உள்ளன என கூறியுள்ளனர்,

இன்றுள்ள இனமொழிக் கோட்பாடுகளில் திராவிட இனத்திற்கும் அதற்குட்பட்ட மொழிகளுக்கும் சிறந்த இடம் இருக்கின்றது.

"குமரிக்கண்டம்" என்று தமிழ் இலக்கியங்களில் பேசப்படுகின்ற லெமூரியா"க் கண்டம் தமிழ் நாட்டின் தென்பகுதியின் இந்து சமுத்திரத்தில் பரந்து விரிந்து கிடந்தது, இதுவே மனித தோற்றத்தின் முதல் பிறப்பிடம் என அறிஞர்கள் துணிந்து கூற முற்பட்டுள்ளனர்.

அறிஞர் ஸ்காட் எலியாட் "இழந்த லெமூரியா" என்னும் தம் நூலில் லெமூரியாக் கண்டமே மனித நாகரீகத்தின் தொட்டில் எனக் கூறியுள்ளனர்

அந் நிலப்பகுதியே தென் அமெரிக்கா, தென் ஆபிரிக்க, மடகாஸ்கார் என ஒருபக்கமாகவும், மலாயா, அவுஸ்திரேலியா என ஒருபக்கமாகவும் பரந்து விரிந்திருந்தது

பஃறுளியாறு பாய்ந்து வளப்படுத்திய பலமலைகள் உள்ளடக்கி உயர்ந்து நிமிர்ந்து நின்றுள்ள குமரிக்கோடு மலையும் செழிப்புற்ற மனித முகத்தின் நாகரீகமும் எடுத்துக்காட்டாக விளங்கியது.

இங்குதான் தமிழர்கள் செழிப்போடு வாழ்ந்தார்கள் இங்கிருந்துதான் தமிழர்கள் வேற்று நாடுகளுக்கு சென்று குடியேறினார்கள் என்று அறிஞர் "ஸ்காட் எலியாட்" நம்புகிறார்.

தமிழ் இலக்கியங்களில் பேசப்படுகின்ற முதல் சங்ககாலப்புலவர்கள் வாழ்ந்த "தென்மதுரை" இங்குதான் இருந்தது என்றும் நாலாயிரத்து நானூற்றி நாற்பது ஆண்டுகளுக்கு இச் சங்க காலம் நீடித்தது என்று சொல்லப்படுகிறது.

## மனித நாகரீகத்தின் தொட்டில் தமிழே!

பிற்காலத்தில் இவ் லெமூரியாக் கண்டம் கடல் கோளினால் மூழ்கிவிட்டது.

இந் நிகழ்வை சிலப்பதிகாரம், புறநானூறு, இறையனார் களவியல் உரை போன்ற நூல்களில் விதந்து கூறப்பட்டுளளது

கடல் கோளினால் லெமூரியா மெல்ல மெல்ல அழிந்த போது அங்கிருந்த மக்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்று குடியேறினர் என்றும் அறிய முடிகின்றது

**- பிரகாஸ் -**

"பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்

இது போன்ற வேறு கடல் கோள்களும் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது

தென்னிந்தியா, பலுக்கிஸ்தானம் (பாகிஸ்தான்). இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ்தீவு. தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் அதிகளவும், ஏனைய நாடுகளில் சிறிய அளவிலும் தமிழ்மொழி பேசப்படுகின்றது தமிழ் மொழிக குடும்பத்தைச் சேர்ந்த தெலுங்கு கன்னடம், மலையாளம். துளு, குடகு உட்பட இருபத்திரண்டு மொழிகள் பேசப்படுகிறது இம் மொழிகளை திராவிட மொழிக் குடும்பம் என அழைக்கின்றனர். இவற்றை தெற்கு, மத்தி, வடக்கு திராவிட மொழிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர் பழமையான இலக்கண இலக்கியங்களைக் கொண்ட இவம் இந்தியா நாட்டிற்குரிய மொழியினம் இது என்று கூறுவர்

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் வழங்கும் மற்றொரு இனம் உராலிக், அல்டயர், இதன்கண் நாற்பது மொழிகள் அடங்குகின்றன இவற்றை உராலிக் அல்டயர் என இரு பிரிவுகளாகப் பிரிப்பர்,

உராலிக் பிரிவை பின்னிஸ், உக்ரிக், செமியன் எனவும் அல்டய்க் பிரிவினை துருக்கி. மங்கோலியன், மஞ்சுதுங்கூஸ் எனவும் பிரிப்பர், இந்த இனத்தில் பின்னிஸ், ஹங்கேரியன், துருக்கி, மங்கோலியன் சங்கூஸ் மொழிகள் அடங்கும், இம் மொழிகள் பின்லாந்து, ஹங்கேரி, துருக்கி, ரஷ்யா, சீனா, மங்கோலியா போன்ற நாடுகளில் பேசப்பட்டு வருகின்றன. இவற்றை டாக்டர் கால்டுவல் சிந்திய இனம் என்று அழைத்தார், இவற்றிற்கும் திராவிட மொழிகட்கும் மிகத் தொடர்புண்டு என்பது அவர் கொள்கை இதுபோல் ஜப்பானிய, கொரிய மொழிகளுக்கும் திராவிட மொழிகளும் தொடர்பு உண்டென்று வாதிடுவோருமுளர்

உலகின் பல பாகங்களிலும் வழங்கிய மொழிகள் பலவற்றை ஆராய்ந்த டாக்டர் கால்டுவல் திராவிட மொழிகள் வட மொழியிலிருந்து தோன்றியவை என்ற கூற்றை நீக்கி இவை ஒரு தனி இனத்தைச் சார்ந்தவை என்று நிலைநாட்டினார்.

சிந்திய இனத்துடன் தொடர்புபடுத்திக் காட்டியபோதிலும் திராவிட மொழியியலின் தந்தை இவரே

பாரசீகம் என்று போற்றப்படுகின்ற இன்றைய ஈரானிய மக்களினம் எது? திராவிட இனத்துக்கும் இவர்களுக்கும் தொடர்புண்டா இவர்களது மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்துள்ளதா என பல ஆய்வுகள் கேள்வி எழுப்புகின்றன.

இன்று கூட பலுக்கிஸ்தான் பிரதேசத்தில் வாழும் மக்கள் திராவிட மொழி ஒன்றையே பேசுகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு பெருமையும், நாகரீகமும் உடைய தமிழினம் நாடற்று தலிவுற்று பொலிவிழந்து நிற்பது ஏன்? இன்று நமக்கென்று ஒரு நாடு இல்லாமல் இருப்பது ஏன்? ஒவ்வொரு தமிழனும் சிந்திக்கும் நேரமிது

## :-கவிதை வெளி-:

### அகிம்சை விளக்கு

ஊரெழு மண் விளைந்த
ஒளி மழுங்கா மாணிக்கமே!
தொல்லைகள் தீர்க்கவென்று
நல்லையில் வீற்றிருக்கும்
பன்னிரு கரத்தான்
பார்த்திருக்க பன்னிருநாள்
பசி கிடந்த பாலகனே!
அருளொழுகு கண்ணிருந்தும்
நல்லைக் கந்தனவன்
சாதிக்க மறந்ததனை
சாதிக்க வேண்டுமென்று
ஆதிக்க அரசிற்கு
பாடமொன்று போதிக்க
நல்லையில் வந்தமர்ந்து
நாவரண்டு போனாயே!
அண்ணன் படை வெல்லுமென்று
தளராத நம்பிக்கை
உன் சிரிப்பில் உறைந்து கிடந்தது
ஒளி வாங்கி வழி வந்த
உன் உரையில் சுதந்திர
தமிழீழம் சிரித்து நின்றது
திலீபா ஆண்டுகள் பல
கடந்தும் எம் நினைவெல்லாம்
திலீபா திலீபா —

க, லிங்கராசா

### மண்ணின் பெருமை

வீரம் விளையும் எமதீழத்து மண்ணில்
வீசும் காற்றெழுந்து ஏவிபாடும்
வானத்துப் பறவையினங்கள்
மாண்டு போன மைந்தரின்
வரலாறு சொல்லித் திரியும்
பொங்கியெழும் கடலலைகள்
புலிவீரர் பகை வெல்லும் கதையியம்பும்
ஓங்கியுயர் மரங்களெல்லாம்
வேங்கைகள் வாழ்வை விபரிக்கும்
தாவுகின்ற குரங்கினங்கள்
தலைவன் படைத் தாக்குதனால்
தமை மறந்து துள்ளிக் குதிக்கும்
தேன் குடிக்குப் வண்டினங்கள்
தமிழீழ மண்ணின் புகழ் பரப்பி நிற்கும்
இப் பெருமைகள் இலங்குகின்ற
தமிழரின் தாயகத்தை
தரணியில் பறை சாற்றிட
நாவொன்று போதாதையா

ம. கதிரவன்

(காந்தி - குருகுலம் விடுதி மாணவர்களினால் வெளியிடப்பட்ட 'தென்றல்' கையெழுத்து சஞ்சிகையில் இருந்து)

### உலக வழக்கு

ஒரு மூகமூடி
கொஞ்சச் சாமம்
சில
வெள்ளை ஆடைகள்
லெனின்
மா ஓ சேதுங்
மகாத்மா காந்தி
திருவள்ளுவர்
றொபேட் ஓவன்
மகாகவி பாரதி
யோக்றோரின் வசனம் கொஞ்சம்
கத்தி கண்டக் கோடரி
துப்பாக்கி
எனக்கு இப்போது
தேவையாக இருக்கிறது
நானும்
இந்த உலகத்தில்
மனிதர்களோடு மனிதனாக
உலவுவதற்காக

- பொன் காந்தன்

### வரம் தருவாய் முருகா!

என் ஊர் மாரியம்மன் கோயில்மணி
ஓசை கேட்க ஆசை
அவன் தேரேறி வரும்வேளை
காவடிகள் காண ஆசை
தோழரோடு கூடி ஒன்றாய் ஓடி விளையாடி
- நிறை
கல்லூரி வாசல் ஏற ஆசை
கலைவாணி விழாவில் கல்வியா! செல்வமா
- வீரமா!
பட்டிமன்றம் கண்டுவிட கண்களிற்கு ஆசை
காவிய நாயகர் துயில் கொள்ளும் கோப்பாய்
துயிலுமில்லம் காண கோடான கோடி
- ஆசை
சந்தபுரம் குடிகொண்ட கந்தா
கடல் கடந்து வந்தவன் மேல் கருணை
காட்டப்பா!
என் ஊர் ஏறி நிற்கும் சிங்கங்கள் ஓட
புலிபுகும் நாளொன்று விரைவினில் மலர
வடிவேலா வரம் ஒன்று தரவேண்டும்,

காவலூர்ச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப பணியாளருக்கு ஊதியம் வழங்கவேண்டும்

திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம், பிறப்பிடம் காரைநகர். சிறுவயது முதலே ஆரம்பக் கல்வியை செட்டிய குறிச்சி அ.த.க பாடசாலையில் ஆரம்பித்தார். எஸ்.எஸ்.சி சித்தியடைந்து உயர்கலைக் கல்லூரியில் செயலாளர் முகாமைப் பயிற்சியைப் பெறுக்கொண்டார் ஆரம்பத்தில் தட்டெழுத்து இலிகிதராக சேர்ந்துகொண்ட இவர் செயலாளர், கடன் முகாமையாளர் ஆகிய பணிகளுக்கூடாக பொது முகாமையாளர் பணிநிலைக்கு உயர்ந்தார். ஏறக்குறைய பதினைந்து வருடங்கள் பொது முகாமையாளர் அனுபவத்தைக் கொண்டுள்ள இவர் யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் முகாமைத்துவ) சாதாரண பிரிவு, உயர்தரப் பிரிவு என்பவற்றின் மாணவராவார்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் முன்னோடிக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றான பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நீண்டகால அனுபவமுடைய பொது முகாமையாளரான இவரை செவ்வி காண்பதில் சங்கமம் பெருமையடைகிறது இச்செவ்வியானது திரு ம. ஜெகநாதன், திரு அ. அன்ரன் அன்பழகன் ஆகியோரால் பூநகரி ப.நோ.கூ.ச தலைமைப் பணியகத்தில் பெறப்பட்டதாகும்.

● *நீங்கள் சேவையில் இணையும் போதுள்ள கூட்டுறவுச் சங்க நிலைமைகள் பற்றிக் கூறுங்கள்?*

● 1971-2-15 இல் தட்டெழுத்து இலிகிதராக சேவையில் இணைந்து கொண்டேன். அப்போது திரு டொ. பொன்னுத்துரை என்பவர் பொதுமுகாமையாளராக இருந்தார், அப்போது சங்குப்பிட்டி - கேரதீவு ஆயச் சேவையை தனியாரிடமிருந்து 1972ல் ப நோ. கூ. ச பொறுப்பேற்றுக் கொண்டது. 1971 இல் அரிசி ஆலை ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வாறு எமது சேவைகள் விஸ்தரிக்கப்பட்டது. அப்போது வாடியடியில் எமக்குரிய கட்டிடத்தில் எமது சங்கம் செயற்பட்டது அதேபோன்று பூநகரி, முழங்காவில் பகுதிகளில் எரிபொருள் சேவை நிலையமும் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு சங்கம் பல்வேறு பணிகளுக்கூடாக வளர்ச்சியடைந்தது.

★ *அங்கத்தவர் நலன்பேணும் நடவடிக்கைகள், மக்கள் சேவை உற்பத்திசார் நடவடிக்கை என பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை உங்கள் சங்கம் மேற்கொண்டிருந்ததாக அறிகிறோம், இவை பற்றிய விபரங்களைக் கூறுங்கள்?*

● அனேகமாக 1976 ஆம் ஆண்டிலிருந்து எமது சேவை நடவடிக்கைகள் விஸ்தரிப்பும் பெறத் தொடங்கின. அப்போது இன்றைய எமது அரசாங்க அதிபர் திரு. இ இராசநாயகம் அவர்கள் எமது சங்கத்தின் தலைவராக இருந்தார். அரிசி ஆலை அமைக்கப்பட்டதுடன் எமது அங்கத்தவர்களான விவசாயிகளிடமிருந்து அவர்களின் உற்பத்தி முழுவதையும் அன்றைய சந்தை விலையைவிட அதிகரித்த விலையில் கொள்வனவுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தினோம். இதனை 1991 வலம்புரி இராணுவ நடவடிக்கையில் இடம் பெயரும் வரை செயற்படுத்தினோம் இதனால் எமது அங்கத்தவர்களான விவசாயிகள் பெரும் பயனடைந்தனர் யாழ்ப்பாணத்துக்கான முக்கிய அரிசி விநியோகஸ்த்தர்களாக நாம் இருந்தமையால் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது. இதே போன்று மிளகாயையும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து விற்பனை செய்தோம். இதற்காக Care நிறுவனம் ரூபா இரண்டு இலட்சத்தை கடனாக தந்துதவியது. இதேபோன்று எமது எல்லைப்பரப்பில் மீனவர்களின் கருவாட்டினையும் பெற்று அவர்களுக்கான சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்தினோம்.

இக் காலகட்டத்தில் எமது சங்க மகளிர் அங்கத்தவர்களை இணைத்து மகளிர் குழு ஒன்று ஏற்படுத்தி அவர்களுக்கு பலவேறு பயிற்சிகள் அளித்து அவர்கள் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட உதவினோம். இதற்கு "உலக தரிசனம்", "ஒக்ஸ்பாம்", "பூநகரி அபிவிருத்தி நிறுவனம்" ஆகிய போன்ற நிறுவனங்கள் உதவிபுரிந்தன கௌதாரி முனைப் பகுதியில் 50 வீட்டுத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது, இதில் வறிய விதவைகள், விவசாயிகள் என்போருக்கான ஏழு இலவச வீட்டுத் திட்டமும் செயற்படுத்தப்பட்டது. பூநகரி மகாவித்தியாலயத்திற்கான குடிநீர் விநியோகத் திட்டம் "நேராட்" நிறுவன உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. மன்னார் - கிளிநொச்சி போக்குவரத்து சேவை, கல்விச் சேவைக்கான நிதி ஒதுக்கம் என்பனவும் ஏற்படுத்தப்பட்டது.

★ *1991 இல் இடம்பெற்ற வலம்புரி இராணுவ நடவடிக்கை தொடர்பாக உங்கள் சங்கத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி குறிப்பிடுங்கள்?*

● அப்போது நான் இங்கு இருக்கவில்லை கொழும்பில் இருந்தேன் எனினும் உடனடியாக திரும்பிவந்துவிட்டேன் எமது அரிசி ஆலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல் புழுங்கல் என்பவற்றுடன் மீண்டும் ஜெயபுரத்தில் இயங்கத் தொடங்கினோம். களஞ்சியம், காரியாலயம் என்பன இருக்கவில்லை இடம்பெயர்ந்த மக்கள் குடியிருந்த இடங்களில விற்பனை நிலையங்களை ஆரம்பித்து நடத்தினோம். அவை தற்போது இடம்பெயர்ந்த கிளைகளுக்கூடாக செயற்படுகின்றது

தற்போது மீண்டும் அரிசி ஆலை, வெதுப்பகம், நல்லெண்ணை உற்பத்தி என எமது சேவைகளை விஸ்தரித்துள்ளோம் அத்தோடு இடம்பெயர்ந்த நிலையிலும் கல்வி மேம்பாட்டிற்காக எமது நிதியில் பெரும் பகுதியை ஒதுக்கியுள்ளதோடு, இரண்டு நூலகங்களை எமது சங்கத்தினால் நடத்துகிறோம் ஒன்று பூநகரி நல்லூரிலும், மற்றையது ஜெயபுரத்திலும் அமைந்துள்ளது கட்டட வசதி இல்லாத நிலையிலும், அறிவு தரும், வாசிப்புப் பழக்கத்திற்கு ஊக்கம் கொடுக்கும் சேவையினைத் தொடர்கிறோம்.

● *மிக நீண்டகால அனுபவமுடைய தாங்கள் பல்வேறு தலைவர்களை தங்களுடைய சேவைக் காலத்தில் கண்டிருப்பீர்கள் ஒரு நல்ல தலைவனுக்குரிய பண்புகள் எவ்வாறு இருக்கவேண்டும் என நினைக்கிறீர்கள்?*

★ மாகாணசபையின் பிரதம செயலாளராக இருந்த திரு க திருஞானமூர்த்தி, எமது மாவட்ட அரசாங்க அதிபர் திரு தி இராசநாயகம் ஆகியோர் போன்ற உயர் அதிகாரிகளில் இருந்து விவசாயிகளான திரு அ பொன்னுத்துரை, திரு மகாதேவா, திரு கார்த்திகேசு, திரு நந்தராசா போன்ற பல்வேறு தலைவர்களை எமது சங்கம் கொண்டிருந்தது இவர்களின் சிறப்பான வழி நடத்தலே எமது சங்க வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்தது.

தலைவர் எப்போதும் பொதுநலத்தில் அக்கறையுடையவராக இருத்தலே அவசியமான பண்பாகும். நிறுவனத்தின் நோக்கத்துக்கு உறுப்பினர்களையும், பணியாளரையும் வழிநடத்தக்கூடிய ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

● *நீண்டகாலப் பணியாளர் என்ற வகையில் சங்கப் பணிநிலை தொடர்பாக தங்கள் கருத்து என்ன?*

★ முதலாவதாக அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வகையில் ஈடுகொடுக்கக்கூடிய ஊதியம் வழங்கப்படவேண்டும், இதுவே கூட்டுறவுப் பணியாளர் முகம் கொடுக்கும் பிரதான பிரச்சினையாகும்.

அடுத்து சங்க முகாமைச் சபை பணியாளர் கட்டுப்பாட்டை பொது முகாமையாளர் ஊடாகவே நடத்தவேண்டும் இதுவே நல்லதொரு முகாமைக்கு அடையாளமாகும்.

இதேபோன்று பணிநிலை நியமனங்களில், கூட்டுறவு பணியாளர் ஆணைக்குழு சட்டங்களுக்கு அமைவாக உள்ளக ரீதியான விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். இதுவே பணியாளர்களின் மனதில் நல்லெண்ணத்தையும், நிறுவனம் மீதான ஈடுபாட்டையும் ஏற்படுத்தும்.

## திங்கள் ஓர் அறிமுகம்

**கிளி-ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்**

யாழ். குடாநாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள தீவுத்தொகுதியே தீவகம் இப்பிரதேசத்தின் தீவுப்பகுதி வடக்கு என அழைக்கப்படும். ஊர்காவற்றுறை பகுதியிலே கிராம ரீதியாக செயல்பட்டு வந்த விவசாய நுகர்ச்சி சங்கங்கள் பின்னாளில் பல மாற்றங்களுடாக வளர்ச்சியுறவே 1971ம் ஆண்டின் தற்போதைய ப நோ கூ சங்க நடைமுறைகொண்டு வரப்பட்டு ஊர்காவற்றுறை, காரைநகர் வேலணை, புங்குடுதீவு சங்கங்கள் உருவாகின. அடுத்து குறுகிய கால நடவடிக்கையின் பின் காரைநகர் தவிர்ந்த சங்கங்கள் இணைக்கப்பட்டு தீவக ப.நோ கூ சங்கம் என மாற்றம் அடைந்து ஊர்காவற்றுறையின் தலைமைப்பணிமனையைக் கொண்டு இயங்கியது மீண்டும் 1977ம் ஆண்டு பிரிந்து ஊர்காவற்றுறை, வேலணை புங்குடுதீவு என இயங்கியது ஊர்காவற்றுறை ப. நோ கூ சங்கத்தின் செயற்பாட்டுப்பிரதேசங்களாக ஊர்காவற்றுறை பட்டினசபை நாரந்தனை கிராமசபை அனலதீவு கிராமசபை, எழுவதீவு கிராமசபை இவற்றுடன் சரவணையின் ஒரு பகுதியுமாகும் சங்கத்தின் தொழிற்பாடாக நுகர்ச்சி விவசாய எரிபொருள் கட்டடப் பொருட்கள் விற்பனையுடன் பீடி அப்பளம், நெசவு உற்பத்தி நடவடிக்கைகளுடன் சின்னமுளாய் வைத்தியசாலை நடத்தியமை இராணுவ நடவடிக்கை காரணமாக 1990 முற்பகுதியில் ஊர்காவற்றுறையில் இருந்து இடம்பெயர்ந்து சின்னமுளாய்வைத்தியசாலையிலும் 1990ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் நாரந்தனை கந்தசாமியார் ஆலய அருகாமையிலும் 1991ம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ் ப நோ கூ சங்க மேல் மாடியிலும் 1991ம் ஆண்டு மே மாதம் மண்கும்பானிலும் 1991ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் யாழ் பி. எஸ். சேவிஸ் நிலைய மேல் மாடியிலும் 15-11-1995 சாவகச்சேரி நவீன சந்தை மேல் மாடியிலும் தலைமை அலுவலகம் நகர்த்தி நகர்த்தி இயங்கி வந்த வேளை 08-01-1996ல் வன்னிப்பெருநிலப்பரப்பில் எமது மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கோடு உப அலுவலகம் கிளி - கணேசபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 19-04-1996ல் சூரியகதிர் 2 இடம்பெயர்வுடன் அவ்வலுவலகமே தலைமையலுவலகமானதுடன் மீண்டும் "சத்ஜெய" நடவடிக்கையால் 26-07-1996ல் கிளி-ஸ்கந்தபுரத்தில் இயங்க ஆரம்பித்து தொடர்ந்து இச் சங்கத்தின் நிரந்தர செயற்பாடு கருதி 12-02-1998ல் கிளி ஊர்காவற்றுறை ப நோ கூ சங்கம் என கிளி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் பதிவுசெய்யப்பட்டது இதற்கான பதிவு இல - 187 ஆகும் அதே வேளை ஊர்காவற்றுறை ப.நோ கூ சங்கம் 1996ம் ஆண்டு மே மாதம் தொடக்கம் ஊர்காவற்றுறையில் செயற்பட்டு வருகின்றது

## கரைச்சி வடக்கு கிளைக்குழு தேர்தல்

கரைச்சி வடக்கு ப நோ. கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல்கள் விரைவில் நடைபெறுவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக கிளி மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## விளையாட்டுப் போட்டி

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் திராஞ்சி தீவகக் குடியிருப்பு முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப்போட்டி கடந்த ஆகஸ்ட் ஆறாம் திகதி தீவகக் குடியிருப்பு சேமிப்பு சங்க உபதலைவர் திரு. பீ பிரான்சின் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது

பெருந்திரளான மக்கள் முன்னிலையில் நடைபெற்ற இவ் விழாவில் சிறார்களின் விளையாட்டுத் திறன் எல்லோரையும் கவர்ந்தது (இ.ம)

## கரைச்சி கிழக்கு கிளைக்குழு தேர்தல்

கரைச்சி தெற்கு தாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து பிரிந்து புதிதாக பதிவு செய்யப்பட்ட கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல்கள் 19. 8. 98 அன்று நடைபெற்றது.

## கிருஷ்ணர் ஆலய கும்பாபிசேகம்

முழங்காவில் இளநிலா குடியிருப்பில் புதிதாக கிருஷ்ணர் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீதேவி, பூதேவி சமேத வெங்கடேச வரதராஜப் பெருமாள், ஆஞ்சநேயர், சனீஸ்வரன் ஆகிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு செப்ரெம்பர் 12ம் திகதி சனிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. முதல் நாள் 11ம் திகதி வெள்ளிக்கிழமை எண்ணெய் சாற்றலும் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உழியடி உற்சவமும் நடைபெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிறுவனம் அல்லது செயல்படு தொகுதியில் தனி ஒருவரினால் சகல செயற்பாடுகளையும் நிறைவேற்ற முடியாது. இதனால் பலர் ஒன்றிணைக்கப்பட்டு நிறுவனத்தின் நோக்கத்தினை அடையும் பொருட்டு அவற்றைப் பயன்படுத்தி வினைத்திறன் மிக்க செயல் திறனை பெற்றுக் கொள்ளுதல விருத்தியடையச் செய்தல் தொடர்ந்து பேணி பாதுகாத்துக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு தந்திரோபாயமே மனித சக்தி திட்டமிடலாகும

# மனிதசக்தி திட்டமிடல்

நிறுவனத்தின் சொத்துக்களான பணம், பொருள், மனிதன், இயந்திரம போன்றவற்றில் மிகவும சிக்கலானதும் மாறுபட்ட குணங்களுடன் தன்னிச்சையான தூண்டல் பேறுடையதும் முன் கூட்டியே எதிர்வு கூற முடியாததுமான சிறந்த முறையில் முகாமை செய்ய வேண்டிய வளம் மனித சக்தியே.

மனித சக்தித் தேர்ச்சித் திறனுள்ள ஓர் முகாமையாளர் அல்லது தலைவர் தன் கீழ் பணியாற்றும ஊழியர்களிடமிருந்து சிறந்த ஒத்துழைபபினை பெற்றுககொள்வதற்கு ஊழியர்களின் ஆற்றல் அல்லது செயல் நிறைவேற்று வலுவை அதிகரிபபதற்கு பயிற்சியளித்தல் ஊக்குவித்தல் செயல் திறனை மதிப்பிடுதல் வலுவிற்கேறப அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றின் மூலம மனிதசக்தியின் உச்ச பயனை எட்டமுடியும்.

மனித சக்தியினை மேன்மையடையச் செய்வதற்கு நிகழ்காலத் தேவைகளை விட எதிர்காலத் தேவையையே அடிப்படையாகக் கொண்டு ஒரு செயல் நிறைவேற்றும நிபுணத்துவ வலுவை அதிகரிக்கும் நோக்கில் ஊழியர்கள் பயிற்சிக்கப்படல் வேண்டும் இதன் மூலம ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்பட்டு தன்னிச்சையான ஒத்துழைப்பினை வழங்குவதுடன் நிறுவனத்தின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு சில சாதனைகளை செய்வதற்கு உந்தப்படுவதுடன் நிறுவனத்தின் மீதும முகாமை மட்டத்தின் மீதும் நன்மதிப்பும பற்றுறுதியும் கொண்ட மனித சக்தியாக மாற்றமடைகின்றது.

ஒரு நிறுவனத்தில் தொழிற்பிரிப்பு என்பது மிகவும் முக்கியமானதும் ஊழியர்களின அறிவு, திறன், வலு என்பவற்றுக்கேற்ப செயற்பாடுகளை தொகுதியாக்கி பல்வேறு கட்டங்களாக வகுத்து பொறுப்புக்களும் அதிகாரங்களும் ஒப்படைக்கப்படும்போது சம்பந்தப்பட்ட துறையில் சிறப்புத் தேர்ச்சி அடைவதுடன் வினைத்திறனையுடைய செயல் திறனை பெற்றுக்கொள்ள முடியுமென முகாமைப் பேரறிஞரான ''ஹென்றி பயோல'' கருத்துத் தெரிவித்துள்ளார்.

மானிடவியல் உறவுக் கோட்பாட்டின் தந்தை யென அழைக்கப்படும் ''எல்ரன் மேயோ'' என்பவரின் எண்ணக்கருத்துப்படி மானிடவியல் உறவினை முகாமையாளர்கள் ஊழியர்களிடம் கொண்டிருப்பதன் மூலம் உளத்தாக்கம் ஏற்படாத சிறந்த விசுவாசமான மனித சக்தியினை பெற்றுக்கொள்வதுடன் ஊழியர் புரள்வு வீதத்தினை இழி நிலையில் பேணி ஆளணி உறுதித்தன்மையை வலுவடையச் செய்ய முடியும்.

இவ்வாறான சிக்கலானதும் மாறுபட்ட குணாம்சங்கள் கொண்டதுமான மனித சக்தியினை வழி நடத்தக்கூடிய சிறந்த முகாமைத்துவப் பண்புகளை கொண்டுள்ள முகாமையாளர் தன் கீழ்ப் பணி புரிவோரின் பலங்கள், பலவீனங்கள் என்பவற்றை கண்டறிந்து பலத்தினை அதிகரிக்கவும பலவீனத்தைக் குறைக்கவும் ஒழுங்கமைத்தல நடவடிக்கைகளைக் கையாள்வதுடன ஜப்பானிய முகாமைத்துவ தத்துவத்தின்படி ஊழியர்களின் சுயதேவைகள் சிலவற்றைத் திருப்தி செய்வதன் மூலம் ஊழியர்கள் விசுவாசத்துடன் நிறுவனத்தின் பேறுமதியை உச்சப்படுத்தக்கூடியதாக செயல்படத் தூண்டப்படுகின்றார்கள் எனபதேயாகும்.

ஊழியர்களுக்கு அதிகாரப் பொறுப்புக்கள் கையளிக்கப்படும் போது அவர்கள் இவற்றைத் துஷ்பிரயோகம் செய்யாது பார்த்துக்கொள்வதுடன் நிதி மற்றும் வளங்களை கையாள்வதில் தவறுகள் மோசடிகள் இடம்பெறாதவாறு ஒழுங்கமைத்தல் கட்டுப்படுத்தல நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

கூட்டுறவு நிறுவனங்களில் இவ்வாறான சிறந்த மனித சக்திகளை திட்டமிட்டு வழிநடாத்துவதன மூலம் சிறப்பான சேவையினைப பெற்று கூட்டுறவையும் நாட்டையும வளமடையச் செய்ய முடியும்.

பொ. ஈசன்

துணுக்காய்ப்பகுதி ப. நோ. கூ. சங்கம் துணுக்காய்.

# கூட்டுறவு முறை ஏறக்குறைய ஒரு சமூகப் புரட்சியாகும்

## கூட்டுறவின் சிறப்பு

ஒவ்வொரு நாட்டின் தேசிய பொருளாதார திட்டத்திலும் கூட்டுறவு இயக்கம் பொறுப்பேற்று செயலாற்றுவதற்காக ஒரு பெரும் பங்கு தரப்படுகின்றது பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடுகளாகிய சுவிடன். டென்மார்க், இங்கிலாந்து ஜேர்மனி போன்ற நாடுகளானாலும் சரி பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் இலங்கை இந்தியா போன்ற நாடுகளானாலும் சரி நுகர்ச்சிப் பொருட்களை விநியோகம் செய்வதிலிருந்து பொருட்களை உற்பத்தி செய்வது வரை பலனாயிரக்கணக்கான மக்களைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு கூட்டுறவு இயக்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது

வாணிகச் சூதாட்டம். பஞ்சம், சுரண்டல், ஆகியவற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் ஒரு படைக் கருவியாகக் கூட்டுறவு இயக்கம் விளங்குகின்றது.

கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாகும் மக்கள் சக்தியால் உருவாக்கப்பட்டு மக்களுக்காக மக்களாலேயே நடாத்தப்பட்டுவரும் இயக்கமாகும் தமது பொதுப் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கூட்டுறவை கருவியாக பாவிக்கும் மக்களைக் கொண்ட மக்கள் இயக்கமே கூட்டுறவு இயக்கமாகும். அரசாங்கத்தின் ஆதரவின்றி மக்களினால் ஆரம்பிக்கப்பட்டு இன்று கூட்டுறவு துறை எனக் கூறும் அளவிற்கு வியாபித்து வளர்ந்துள்ள கூட்டுறவு இயக்கத்தை மேல் நாடுகளில் காணலாம.

தன்னிச்சையாக ஒன்று சேர்ந்த மக்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சம உரிமை குடி ஆட்சி, சுய உதவி, அன்னியோன்னிய உதவி, சிக்கனம் நெறி முறைமை என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு தமது பொருளாதாரத்தைமுன்னேற்றுவதற்குக் கூட்டுறவு இயக்கம் வழி வகுக்கின்றது

இம் மக்கள் இயக்கத்தின பிரதிபலிப்பாக விளங்குகின்ற கூட்டுறவு நிறுவனங்கள் சேவை கருதியே இயங்குகின்றன முதலாளித்துவ பொருளாதார அமைப்பில காணப்படுகின்ற இலாப நோக்கம் கருதி இயங்கும் வியாபார நிறுவனங்களைப் போல் அல்லாது பொருளாதார தேவைகளைச் சுரண்டும் குணவந்த கொள்கையை நீக்கும ஒரு சிறந்த வியாபார அமைப்பாக திகழ்கின்றது மனிதத் தன்மையின் அடிப்படையிலே 'றெஸ்டேல்' முன்னோடிகளின் பணிகளைத் தொடர்ந்து ஆதிலாபமீட்டும் ஆட்சிமுறைக்குப் பதிலாக சமுதாயம் முழுவதினதும் பரஸ்பர தன்னுதவியின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு இயக்கமாகத் திகழ்கின்றது

கூட்டுறவு முறை ஏறக்குறைய ஒரு சமூகப் புரட்சியாகும், அரசியல், சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுள்ளவர்களும். அதிகம் வேறுபட்ட அபிப்பிராய பேதங்கள் உடையவர்களும் ஒன்றுகூடி பொதுவில் செயல்படும் நடு நிலைமைத் தளமாக கூட்டுறவு மிளிர்கின்றது

அங்கத்தவர்கள் இடும் மூலதனம், இலாபமீட்டும் நோக்கத்துடன் இடப்படாது எல்லோரும் சேவைபெறக்கூடியதாக உபயோகிக்கப்படும் சமூக நிதியாக மாறி முதலாளித்துவ பொருளாதார அமைப்பின நோக்கத்தை முறியடிக்கின்றது, கூட்டுறவு ஸ்தாபனங்கள் நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றை மக்களிடையே புகுத்திப் பொருளாதார மேம்பாட்டுக்கு மாத்திரமன்றி ஒழுக்க மேம்பாட்டுக்கும் வழிவகுக்கின்றது இலாபமீட்டும் நோக்கை அகற்றி எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும், ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும வாழும் வாழ்க்கை நெறியாகக் கூட்டுறவு திகழ்கிறது.

சாதிமத இன பேதமின்றி எல்லோரும் ஒன்று சேர்ந்து நமது பொருளாதார விருத்திக்காக உழைக்கும போது தேசிய ஒற்றுமை உருவாவதற்கும் வழி வகுக்கின்றது இதனால் தன்னம்பிக்கையுடைய ஒழுக்க மேம்பாடுள்ள ஒற்றுமையான தன்னலமற்ற சமூக வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றது.

கூட்டுறவு நிறுவனங்கள் உறுப்பினர்களுக்கு ஆற்றும் சேவைகளின மூலமாக அவர்களின் பொருளாதாரம் விருத்தியடைய நாட்டின் பொருளாதாரம் விருத்திவடைகின்றது.

உற்பத்தி சாதனங்களைக் கூட்டுறவு நிறுவனங்கள் தனதாக்கிக் கொள்ளும் பொழுது பொருட்களைப் பாவிப்பவர்களே அவற்றை உற்பத்தி செய்யும் சாதனங்களுக்கும் உரிமையுடையவராகிறார்கள், இது பொதுவுடமைப் பொருளாதார அமைப்புக்கு வழிவகுக்கின்றது

கூட்டுறவு நிறுவனங்கள் தன்னிச்சையாக இயக்கும் சுதந்திர அமைப்புக்களாக திகழ்கின்றன ஜனநாயக தத்துவத்தை கையாண்டு நிருவகிக்கப்படும கூட்டுறவுச் சங்கங்கள் அரசியல் ஜனநாயகத்தை கற்பிக்கும் ஆரம்பப்பாடசாலைகளாக அமைகின்றன,

கூட்டுறவு நிறுவனங்களினால் அளிக்கப்படும் கல்வி முதியோர் கல்வி வளர்ச்சிக்கும கல்வி கலாசார வளர்ச்சிக்கும் துணைபுரிகின்றது

கா. கார்த்திகேசு

# மனிதம் வளர்ப்போம்

''மனிதம்'' என்பது உயர்நெறி முறைகளை உலகுக்கு உணர்த்தத் துடிக்கின்ற ஓர் ஆத்மாவின் குரலாகத்தான் இருக்கவேண்டும் அதில் எவ்வித சந்தேகமும கொள்ளத்தேவையில்லை என்றே தோன்றுகின்றது!

பெருமதிமிக்க மனித உயிர்கள் மனித தத்துவத்தை உணராமல ஆசை, பகை கோபம பொறாமை என்னும் தீக்குணங்களுக்கு ஆளாகி அழிந்து போவதை யார் தடுப்பார்?

வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவித்து நடைபிணமாக உருவெடுக்கும் ஓர் ஆத்மாவை உற்றுப்பார்க்கின்றேன் அங்கே மனிதத்தைக் காணவில்லை! அவன் எங்கோ தொலைந்து நீண்டநாட்களாகியிருந்தது. அன்பு. இரக்கம், கருணை, பொறுமை, உண்மை என்னும் நற்குணங்கள் பொருந்த வாழும் மனிதனிடம் மனிதம் வாழ்கிறது.

நாம் ஒரு தடவை நற்பணி செய்தால் அது பல நூறாகப் பெருகி நம்மிடம் திரும்ப வந்து சேரும் உயர்வான பண்பு அது எங்கிருந்து வந்தது! உள்ளத்தில் ''மனிதம்'' இருப்பதால் வந்தது.

இன்று மனித உலகுக்கு மிக்வும் தேவைப்படுவது ''மனிதம்'' தான் அதனால் தான் இன்று உலகில் இதுபற்றி அதிகம் பேசப்படுகிறது

ஆதலால் ஒவ்வொரு வீட்டிலும் ''மனிதம் வளர்ப்போம் அது பலகிப்பெருகி மனிதவலைகை வளப்படுத்தட்டும். (கலி)

# பூநகரி பிரதேசத்தில் கொலரா தடுப்பு

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் கொலரா தடுப்பு மையங்களை அமைத்து நோய்த் தடுப்பை மேற்கொண்டனர்

அண்மையில் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் உயிர்க்கொல்லி நோயான கொலரா பரவும் அபாயம் ஏற்பட்டது பல அமைப்புக்களின் பெரு முயற்சியால் நோய் பரவவிடாமல் தடுக்கப்பட்டது அனைவரும் அறிந்ததேயமே

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவரும் பூநகரி ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ சங்கம், பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம். பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின சமாசம், விநாயகபுரம் விவசாய கூட்டுறவுச் சங்கம் ஆகியன தங்கள் பகுதிகளில் கொலரா தடுப்பு மையங்களை அமைத்து மக்கள் மத்தியில் கருத்தரங்குகளை நடாத்தி நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர், இச் செயலை மக்கள் பெரிதும் வரவேற்றனர்.

76வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டனர்

## திறப்பு விழா

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் ஜெயபுரம் பிரதான வீதிக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட கால்நடை தீவன விற்பனை நிலைய திறப்புவிழா 28-8-98 வெள்ளிக்கிழமை அன்று பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. இரா. செல்வராஜா தலைமையில் நடைபெற்றது

★ ★ ★

கரியாலை நாகபடுவான் இல - 02 பாடசாலைக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தில் திட்ட அலுவலகத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்கள் வைபவ ரீதியாக திறந்துவைத்தார் இந் நிகழ்வு ஆகஸ்ட் 28ந்திகதி திரு ந. சச்சிதானந்தம் திட்ட அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியின் தந்திரம்

"காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. அதனிடம் ஓநாய், நரி, ஒட்டகம் என்பன அமைச்சர்களாக இருந்தன

சிங்கம் ஒரு நாள் மத யானையுடன் மோதியபோது அதன் கூரிய தந்தங்கள் சிங்கத்தின் உடலைத் துளைத்து விட்டன அதனால் ஒதுங்கி தனிமையில் வாழ்ந்தது ஒரு வாரமாக உணவு கிடைக்காமல் மெலிந்து போயிற்று. அதன் அமைச்சர்களும் பசியால் துடிதுடித்தன. அவற்றைப் பார்த்த சிங்கம் "ஏதாவது ஒரு மிருகத்தை கண்டுபிடியுங்கள் என் நிலைமை எப்படி இருந்தாலும் உங்களுடைய பசியைப் போக்குகின்றேன்" என்று கூறியது அதன் உத்தரவுப்படி அவை காடு முழுவதும் தேடியும் ஒன்றும் அகப்படவில்லை

நரி யோசிக்கத் தொடங்கியது இந்த ஒட்டகத்தை சிங்கம் கொன்றால் எல்லோரும் உண்டு சில நாட்கள் நிம்மதியாக இருக்கலாம்

ஆனால் ஒட்டகம் சிங்கத்தின் நண்பன் ஆகையால் அதைக் கொல்லாது ஆயினும் 'என் யுக்தி சாதுர்த்தால் சிங்கம் அதைக் கொல்லும்படி தூண்டி விடுகின்றேன்"

புத்திசாலிகள் நினைத்தால் எதையும் அறிய முடியும். எதையும் அடைய முடியும். எதையும் அழிக்கவும் முடியும், அவர்களுக்கு முடியாதது ஒன்றும் இல்லை.

ஆகவே என் அறிவைத் தக்கபடி பயன்படுத்துகின்றேன் என்று யோசித்து முடிவுக்குவந்தது நரி.

பிறகு ஒட்டகத்தைப் பார்த்து நம் அரசர் உணவில்லாமல் துன்புறுகிறார் அவர் இறந்தால் நாம் இறப்பது நிச்சயம் ஆகையால் உன் நன்மையும். அரசரின் நன்மையும் கருதி சில கருத்துக்கள் கூறுகின்றேன் என்றது நரி.

நண்பனே உன் சொல்லைத் தட்டமாட்டேன் எஜமானுக்கு ஒரு நன்மை செய்தால் அது நூறு நல்ல காரியங்களுக்கு சமமாகும் என்றது ஒட்டகம்

நண்பா உன் உடலை இரண்டு மடங்கு இலாபத்திற்கு கொடுத்துவிடு அதற்குப் பதிலாக நீ இரண்டு மடங்கு பெரிதாக உடலைப் பெற முடியும் அரசருடைய ஆயுளும் நீடிக்கும் என்றது நரி.

நண்பனே அவ்வாறு செய்ய முடியுமானால் அதற்கு நான் தயாராயிருப்பதோடு; பாக்கியமாகவும் கருதுகின்றேன். இது பற்றி எமதர்ம ராஜாவிடம் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள வேண்டும் என்றது ஒட்டகம்.

இரண்டும் சிங்கத்திடம் சென்றன நடந்தவற்றைக் கூறின சிங்கம் வலையை டந்தது

அரசே ஒட்டகம் தன்னுடைய உடலை இரண்டு மடங்கு பெரிதாக திருப்பிக் கொடுப்பதாக எமதர்ம ராஜன் சம்மதித்தால் தனது உடலைத் தரத் தயாராக இருப்பதாக கூறுகின்றது என்று கூறியது நரி.

## பஞ்சதந்திரக் கதைகள்

ஒட்டகம் சம்மதிக்கவே உடனே சிங்கம் ஒட்டகத்தை காலால் அடித்தது நரியும் ஓநாயும் அதன் வயிற்றைக் கிழித்தன ஒட்டகம் மாண்டது.

அப்போது நரிதான் மட்டும் முழுவதும் உண்ண வேண்டும் என்று யோசித்து இரத்தக் கறை படிந்த சிங்கத்தின் அங்கங்களைக் கண்டதும் அரசே நீங்கள் போய் நீராடி வாருங்கள் நானும் ஓநாயும் இங்கே இருந்து இரையை பாதுகாக்கின்றோம் என்றது.

ஓநாயைப் பார்த்து "நண்பனே பசியால் நீ மிகவும் வாடிப் போனாய் அரசர் திரும்பி வருவதற்குள் கொஞ்சம் சாப்பிடு உன் மீது பழி வராதபடி நான் பார்த்துக் கொள்கின்றேன் என்றது நரி

நரியின்பேச்சை நம்பிஓநாய் கொஞ்சம் சுவைக்கத்தொடங்கியதோ இல்லையோ நரி ஓநாயைப் பார்த்து அப்பால் போய்விடு அரசர் வருகிறார் என்றது.

சிங்கம் நீராடிவிட்டு திரும்பி வந்தது ஒட்டகத்தின் நெஞ்சு பிடுங்கப்பட்டிருப்பதை பார்த்துகோபத்தோடு இதை யார் எச்சிற்படுத்தியது அவனைக் கொல்கிறேன் பார் என்று உறுமியது.

ஓநாய் கெஞ்சும் பாவனையில்நரியைப் பார்த்தது பரிந்து பேசாதா என்றுநரியோ ஏளனமாகச் சிரித்து விட்டு ஒட்டகத்தின் நெஞ்சைத் தின்று விட்டு என்னை ஏன் பார்க்கின்றாய் என்றது.

ஓநாய் பயந்து ஓடத் தொடங்கியது துரத்திச் சென்ற சிங்கம் தன்னைப் போல் நகத்தை ஆயுதமாகக் கொண்ட இனம் அதை ஏன் கொல்லவேண்டும் என கருதி திரும்பி வந்தது.

அப்போது அந்த வழியே வர்த்தகர்கள் மணி கட்டிய ஒட்டகத்தின் மீது பொருட்களை ஏற்றியபடி வந்தனர் மணி ஒலி சிங்கத்தின் காதில் விழவே நரியைப்பார்த்து வா என்று சிங்கம் கட்டளையிட்டது.

நரி கொஞ்சத்தூரம் போய் திரும்பி வந்தது அரசே ஓடிவிடுங்கள் முடிந்தவரை ஓடித் தப்பித்துக் கொள்வதே நல்லது. ஒட்டகத்தைக் கொன்று விட்டு தன்னை சாட்சியாக வைத்தீர்களா? ஒட்டகத்தை திரும்பப்பெற வருகிறார் எமதர்மராஜன் அதைக் கேட்ட சிங்கம் கலக்கமுற்று ஓட்டம் பிடித்தது

நரி மிகுந்த மகிழ்ச்சியோடு ஒட்டக மாமிசத்தை பல நாட்கள் தின்று உயிர் வாழ்ந்தது.

## 'சங்கமம்" குறுக்கெழுத்துப்போட்டி இலக்கம் 1



### இடமிருந்து வலம்

இலக்கம். 1 உலக மகா சக்கரவர்த்தி - குலைமான வரி

இலக்கம் - 11 சம்சாரம் அது மின்சாரம்' படத்தின் கதை வசனகர்த்தா, இயக்குனர் இவர் (மாறியுள்ளார்)

இலக்கம் - 13 உழவுக்கும் தொழிலுக்கும் செய்ய வேண்டியது குழம்பியுள்ளது.

இலக்கம் - 19 சக்கரம்- மாறியுள்ளது

இலக்கம் - 28 நித்திரையில் காண்பது - சிலர் விழித்துக் கொண்டும் காண்பர் குழம்பியுள்ளது

இலக்கம் - 32 சிறையிலிருந்த சீதைக்கு காவல் இருந்த அரக்கி

### மேலிருந்து கீழ்

இலக்கம் - 1 கடலும் கடல் சார்ந்த இடமும்

இலக்கம் - 3 'புத்தன் மறைந்து விட்டான் அவன் தன் இது மறைகிறதா '' என்கிறது பழைய பாடல் ஒன்று

இலக்கம் - 5 நான்கு வேதங்களில் ஒன்று கடைசி எழுத்து விடுபட்டுள்ளது

இலக்கம் - 6 தஞ்சண்டதால் சிவனுக்கு வழங்கப்படும் ஒருபெயர் தலைகீழாகிகுழம்பியுள்ளது.

இலக்கம் - 14 வலைவை பின்னி இரைகளை பிடித்து உண்ணும் பிராணி - குழம்பியுள்ளது

இலக்கம் - 16 எழுத்துசேர்ந்து வருவது சொல் - சொற்கள் சேர்ந்து வருவது இது குழம்பியுள்ளது.

முடிவுத் திகதி - 15-10-98

# பலதும் பத்தும்

## உலக சாதனை

சமீபத்தில் வெளிவந்த 'டைட்டானிக்' திரைப்படம உலக சாதனை புரிந்துள்ளது அமெரிக்காவில் 2650 கோடியும் 4350 கோடியும வசூல் ஆகி சாதனை படைத்துள்ளது.

## எங்கே முடியும்

உலகில் மனித வாழ்வு எங்கே போய் முடியும் என்று யாராலும் கூற முடியாவிட்டாலும் நாளாந்தம் 237748 குழந்தைகள் பிறக்கின்றன.

## வெள்ளம்

டாக்கா நகரம் வெள்ளத்தில் மூழ்கியது. சமீபத்திய அடைமழை காரணமாக பங்களா தேசததில் இரண்டு கோடிப்பேர் வீடுகளை இழந்தனர். தலைநகர் டாக்காவின் மூன்றில் இரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியது பங்களாதேசம் இதுவரை கண்டிராத பேரிடராக இது அமைந்து விட்டது.

## மொழியின் பெருமை

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனாட்ரீகன் ஒரு நடிகர் என்பது நமக்கு தெரியும். அதுபோல் 6000 குட்டித்தீவுகளை கொண்ட பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக ஜோசப எஸ்டிராடா இருக்கிறார். இவரும் ஒரு நடிகர் ஸ்பானிஸ் ஆங்கிலம் ஜனாதிபதமாளிகையில் இதுவரை பேசப்பட்டது.

ஜனாதிபதி எஸ்டிராடா "தகாலக்" மொழியை பேசுகிறார் தாய்மொழிப் பற்றுக் காரணமாக தான் ஆட்சிக்கு வந்தவுடன் "தகாலக்" மொழி ஆட்சி மொழியாக மாறிட சட்டம் போட்டுள்ளார்,

இது மலையாளம் கலந்த தமிழ் மாதிரி உச்சரிக்கப்படுகிறது.

## புதிய எரிபொருள் கண்டுபிடிப்பு

தமிழ் நாடு இராஜபாளயத்தை சேர்ந்த இராமர் பிள்ளை என்பவர் மூலிகையையும் இரசாயனப் பொருட்களையும் கலந்து புதிய எரிபொருளை கண்டுபிடித்துள்ளார். அண்மையில் தமிழ் நாடு முதல் அமைச்சர் மு கருணாநிதி முன்னிலையில் இவ் எரிபொருளை உற்பத்தி செய்து நிரூபித்துக் காட்டினார். இது வெற்றியளிக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் பெற்றோலுக்கு பதிலான மாற்று எரிபொருளாக இது பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது

## ஞானிக்குமா கோபம்

அண்மையில் இந்தியா அணுகுண்டை வெற்றிகரமாக வெடிக்கவைத்து சோதித்தது யாவரும் அறிந்ததே இச்செயலை காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் பாராட்டியுள்ளார். உலகம் அணுகுண்டை வெறுக்கும் இந்த வேளையில் சுவாமிகள் அணுகுண்டை வரவேற்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

## உறவைத்தேடும் திமிங்கிலம்

கொவிலுட் திரைப்படமொன்றால் நடித்துப் புகழ் பெற்ற "கெக்கோ" என்னும் பெயருடைய ஆண்திமிங்கிலம் தன் இனத்துடன் இணைவதற்காக ஐஸ்லாந்து கடாக் கடலில் விடப்பட்டுள்ளது.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பிறிவில்லி திரைப்படத்தில் தன் சாகசங்களை காட்டி கோடிக்கணக்கான ரசிகர்களை கவர்ந்த 'கெக்கோ'' விற்கு விடுதலை கிடைத்துள்ளது.

தன் இருப்பிடத்திலிருந்து T. 17 அமெரிக்க விமானம் சுமந்து வந்து ஐஸ்லாந்து கடலில் சேர்த்து விட்டுள்ளது. ஆனால் இத் திமிங்கிலம தன் இனத்துடன் சேர்ந்து வாழக்கூடிய சூழ் நிலை ஏற்படுமா? என்பது கேள்விக்குரியதாயுள்ளது.

## ஏன் இவ்வளவு அணுகுண்டு

இன்று உலகை அச்சுறுத்தி வருவது அணுகுண்டு என்பது அனைவருக்கும் தெரியும். அணுகுண்டை அழிக்க வேண்டுமென பலநாடுகள் குரல் கொடுக்கின்றன ஆனால் அணு வல்லரசுகளிடம் எவ்வளவு அணுகுண்டுகள் இருக்கின்றன பார்த்தீர்களா?.

### அணு ஆயுத நாடுகள் பற்றி ஓர் குறிப்பு

| நாடு | அணு சோதனையின் எண்ணிக்கை | இருப்பிலுள்ள அணுகுண்டு |
|---|---|---|
| அமெரிக்கா | 1032 | 8711 |
| ரஸ்யா | 715 | 6833 |
| பிரான்சு | 210 | 524 |
| பிரிட்டன் | 45 | 200 |
| சீனா | 45 | 450 |

இந்தியா, பாகிஸ்தான் இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம்
# SANGAMAM

ஆறு 1 அருவி 12
கைந்தபுரம், கிளிநொச்சி. ஆகஸ்ட் 1998


## கூட்டுறவுப் பாலம் அமைப்போம்!

கூட்டுறவிற்கு ஒவ்வொருவரும் தனித்தனி வரைவிலக்கணம் அமைத்துப் பார்த்து மகிழ்ந்தார்கள் கூட்டுறவாளரின் கொள்கை வகுப்பு நாட்டிற்கு நாடு வேறுபடினும் கூட்டுறவில் கூட்டுறவு என்னும் கொள்கைப் படி கை கோர்த்து நிற்கிறார்கள் 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியால் வறிய நிலைக்கு தள்ளப்பட்ட தொழிலாளர் வர்க்கம் கூட்டுறவை நாடியது.

அன்று கைத்தொழில் புரட்சியினால் முதலாளிகள் தொழிலாளிகளின் முழுப் பலத்தையும் சுரண்டி அடிமை ஆக்கப்படுகிறார்கள் என்ற கருத்து மேலோங்கியது.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மன் போன்ற நாடுகளில் சோஷலிச வாதிகளாலும், பொதுவுடமைவாதிகளாலும் கூட்டுறவின் தன்மை பற்றி தொழிலாளர் வர்க்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

கைத்தொழில் புரட்சியால் ஏற்படப்போகும் தீய விளைவுகளைக் கருத்தில் கொண்டு இவற்றில் இருந்து விடுபடும் நோக்குடன் தொழிலாளர்களின் சமூக பொருளாதார விடுதலைக்காக உழைக்கும் பாலமாக கூட்டுறவு விளங்குகின்றது என்பதை நிரூபித்தார்கள்.

வர்க்கப் புரட்சியால் தொழிலாளர் வர்க்கம் அன்று கூட்டுறவை நாடியது பயனடைந்தது ஆனால் இன்று எமது மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கும் போரின் அழிவிலிருந்து மீள்வதற்கு கூட்டுறவு பெரிதும் பயன்படும். ஆயினும் கூட்டுறவுக்குள் முழு மக்களையும் இணைக்கும் பாலம் அமைக்கப்படவில்லை

கூட்டுறவுக் கொள்கை என்றால் என்ன? அதன் மூலம் ஒரு மனிதன் தன் வாழ்வை பூரணமாக்கிக் கொள்ள முடியுமா? என்ற கேள்விக்கு; ஆம் என்று பதில் கிடைக்கும் இது கற்பனை அல்ல உண்மை''.

ஆனால் இந்த கொள்கை மக்களிடம் சென்றுள்ளதா? இதற்கு யார் பொறுப்பு? அனைவரும் பொறுப்புடன் சிந்தித்தால் கூட்டுறவை மீள மறுசீரமைப்பதற்கு ஒவ்வொரு கூட்டுறவாளனும் தயாராக வேண்டும்.

கூட்டுறவில் நாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம் உலகக் கூட்டுறவோடு ஒன்றுசேரவும், கூட்டுறவு சம்பந்தமான வெளியுலக கருத்துக்களை உள்வாங்கவும் முடியவில்லை

நாம் எப்போதும் பழமை பேசுவதால் பயனில்லை நாம் புது வழி தேடவேண்டும்.

வெளியுலக தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டு கூட்டுறவை உலக நோக்கோடு வழிநடத்த முடியவில்லை நேருக்குநேர் பார்வையிடவோ கலந்துரையாடவோ முடியவில்லை. கூட்டுறவாளர் அதன் தலைமை முகாமை, பல நாடுகளுக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு கருத்திசைவாக்கம் பெற வேண்டும். புதிய கணனிகளும் தொழில் நுட்பங்களும் பெற்று வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும் இதுவே நம் நாட்டில் கூட்டுறவை வளர்க்க பெரிதும் உறுதுணையாக இருக்க முடியும்

நாம் எமது மட்டத்திலே நின்று சிந்திப்பதை தவிர்த்து வளர்ந்துவரும் உலகிற்கு ஏற்றவாறு கூட்டுறவைத் தயாரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு கொள்கையைச் சொல்லும் போது அதை ஏற்றுக்கொள்ள பல காலம் பிடிக்கும் அதற்காக சோர்ந்துபோக முடியாது என்பதற்கு உதாரணமாக E V. நீல் இருந்தார் தேசிய சர்வதேச ரீதியில் கூட்டுறவு நிறுவனங்களை ஒன்றிணைப்பதில் சர்வதேச கூட்டுறவு இணைப்பை உருவாக்குவதற்கு E V நீல் மிகவும் பாடுபட்டார் ஆனால் அவர் மறைவிற்குப் பின்னே அது கைகூடியது

1895 ஆவணி 15ம் திகதி இணைப்பு உருவானது சுதந்திரமான ஜனநாயக கட்டமைப்பாக கூட்டுறவை உருவாக்கவும் உதவியது.

சர்வதேச கூட்டுறவு இணைப்புடன் உறவுப் பாலம் அமைக்கும் பணியைத் தொடர்வோம்,

எமது நாட்டின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்த வெளியுலகத் தொடர்பு மிக மிக அவசியம் என்பது உணரப்பட வேண்டும் எதிர் காலத்தில் அவ்வாறான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்க கூட்டுறவாளர்கள் முன்வர வேண்டும்.

போர்ச் சூழலுக்குள் தவிக்கும் மக்களுக்கு மதிநுட்பத்துடன் பணிபுரிவது கூட்டுறவாளனுக்குப் பெருமை பேசும் விடயமாகும்.

# பட்டினிச் சாவைத் தடுப்போம்!
# கிளி.முல்லை கூ.ச.ஒன்றியம் சூளுரை!

**நிவாரண வெட்டினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட கூட்டுறவுச் சங்கங்கள் நிதி, உணவுப் பொருள் சேகரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.**

இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கும் நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால் இவர்களுக்கு உதவி வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் பொது மக்களிடமிருந்துநிதி, பொருள் சேகரித்து வருகிறது

ஸ்ரீலங்கா அரசின் நிவாரண வெட்டினால் கடந்த இரண்டு மாதங்களாக கிளிநொச்சி முல்லைத்தீவு. வவுனியா மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை இதனால் இம் மக்கள் பட்டினிச் சாவை அணைத்துக் கொள்ளும் கொடிய சூழ்நிலைக்கு உந்தப்பட்டுள்ளார்கள,

இவர்களது சுமையை சிறிதாயினும் தணிக்க கூட்டுறவுச் சங்கங்கள் முன்வந்துள்ளன. கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் கிளி - முல்லை வவுனியா கூட்டுறவுச் சங்கங்கள் பொதுமக்கள் பொது நிறுவனங்களிடமிருந்து உணவுப் பொருட்கள் அல்லது நிதி சேகரிக்கும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன காலக்கிரமத்தில் இவை இடம் பெயர்ந்த மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

## போலியோ தின கருத்தரங்கு

உலக போலியோதினத்தை முன்னிட்டு காந்தி நிலையம், குருகுலம் மாணவ மாணவிகளுக்கான போலியோ தினம் பற்றிய கருத்தரங்கு விடுதியில் அண்மையில் நடைபெற்றது

''அந் நோயினால் இறப்புகள் தவிர்ந்த அங்கவீனர்களாக ஏற்படும் பாதிப்புக்களே அதிகம். எனவே குழந்தை பிறந்து 1 1/2 வயது ஆகும் முன்னர் குழந்தைகளுக்கு போலியோ நோய் எதிர்ப்பு மருந்தை வழங்கவேண்டும் பெற்றோர்கள் இதில் கவனம் செலுத்தத் தவறும் பட்சத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் இந் நோய்த் தாக்கம் ஏற்படுவதை தவிர்கமுடியாது'' என சித்த ஆயுர்வேத வைத்தியர் திரு தில்லைவாசன் தெரிவித்தார்.

## கொலரா விடுதி அமைக்க கூட்டுறவுச் சங்கங்கள் அன்பளிப்பு

அக்கராயன் வைத்தியசாலை கொலரா நோயாளர் விடுதி அமைப்பதற்கு அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச சங்கம் இரண்டரை இலட்சம் ரூபாவும் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஐம்பதாயிரம் ரூபாவும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கின.

மேலும் பல நிறுவனங்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட கொலரா நோயாளர் விடுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

## மனிதம மறக்க முடியாத தேவையின் ஊடான சேவை

இராணுவதீர்வில் நம்பிக்கையும் முனைப்பும் கொண்ட சிறிலங்கா அரசு தொடர்ந்து நடாத்திவரும் யுத்தம் எம் மக்களை ஏதுமற்ற ஏதிலிகளாக்கி வீதியில் நிறுத்தியுள்ளது. இந் நிலையில் எமக்கு ஏற்பட்ட உணவு நெருக்கடியை எந்த ஒரு மனித சமூகமும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற காரணத்தால் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தினால் உணவுநிவாரணம் சேகரிக்கும் கைங்கரியமானது மிகவும் பெறுமதியானது என இ. பெயர்ந்தமக்கள் காப்பகம் தெரிவித்தது

## உயர்தர பரீட்சை

கிளி. மாவட்ட கூட்டுறவுக் கல்லூரியில் உயர்தர பயிற்சி நெறியிலுள்ள மாணவர்களுக்கான கூட்டுறவு உயர்தர பரீட்சை எதிர்வரும் ஐப்பசித் திங்கள் இறுதி வாரத்தில் நடைபெறுமென கூட்டுறவுச் சபை தெரிவித்துள்ளது

இ. பெ. மக்களின் நிவாரணத்தை

## மீள வழங்குமாறு கோரி போராட்டம் வலுவடைகிறது

நிவாரணவெட்டுப்பற்றி பொது நிறுவனங்கள் வெளியிட்ட கருத்துக்கள்

★ நிவாரணத்தை முழுமையாக வழங்க சிறிலங்காவிற்கு அழுத்தம் கொடுக்குக.
U N. H. C. R. இடம் கோரிக்கை
- யாழ், மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்-

★ அரசின் நிவாரண வெட்டிற்கு எதிராகப்போர் தொடுக்க வேண்டியது எம் கடமை
- கிளி - மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்

★ மக்களைப் பட்டினி போட முயல்வது சந்திரிகா அரசின் கீழ்த்தரமான செயல்
- கரைத்துறைப்பற்று அரச சார்பற்ற நிறுவன ஒன்றியத் தலைவர்

★ நிவாரண வெட்டால் துன்பப்படும் மக்களைப் பாதுகாப்பது அவசியம்
- முல்லை மாவட்ட வர்த்தக சங்க ஒன்றியத் தலைவர் -

★ நிவாரணத்தை அரசு வெட்டியது வேதனைக்குரிய விடயமாகும்
- U N H C R அதிகாரி-

★ சிறிலங்கா அரசின் நிவாரண வெட்டிற்கு கவலை தெரிவிப்பு
- யுனெஸ்கோ -

★ இனவாத சிங்கள அரசாங்கத்தின் நிவாரண வெட்டை கண்டிக்கின்றோம்.
- கியூடெக் இயக்குனர் -

## முல்லை மாவட்ட கூட்டுறவாளர் தின விழா

முல்லை மாவட்டத்தில் 76வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழா மிக விமரிசையாக இம்முறை கொண்டாடப்பட்டது.

முல்லை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியமும், முல்லை மாவட்ட கூட்டுறவுச் சபையும் இணைந்து ஆவணி மாதம் 23ம் திகதி புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் முல்லை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் திரு. சி பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

முல்லை மாவட்ட கூட்டுறவாளர் தின விழாவில் விவாத அரங்கு, கிராமிய நாடகம், நாடகம், கலைநிகழ்வு, பரிசளிப்பு என்பன இடம்பெற்றன

## அருவி 2 வெளியீடு

கிளி - கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவு உயர்தர பயிற்சி நெறியை முடித்துக் கொண்ட முதலாம் பிரிவினால் இனம் அருவி - 2 நூல் அண்மையில் வெளியிடப்பட்டது

செல்வன் யோகரத்தினம் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் முதல் பிரதியை கிளி. மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவரும், கிளி அரசாங்க அதிபருமான து. இராசநாயகம் பெற்றுக் கொண்டார். கூட்டுறவுக் கல்லூரி மாணவர்களும் கூட்டுறவாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

● கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் சார்பாக இப் பத்திரிகை கிளி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாச அச்சகத்தில் 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org